# Impact of Social Media on Undergraduates: post COVID-19 analysis

# சமூக வலைத்தளங்களின் பாவனை பல்கலைக்கழக மாணவர்களில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்: கொவிட் 19 பரவலின் பின்னரான பகுப்பாய்வு

H.M. Paslan[1], M.N.F. Aakila[2], M.S. Zunoomy[3], F.H.A. Shibly[4]
[1] Department of Islamic Studies, FIA, SEUSL
[2,3&4] Department of Arabic Language, FIA, SEUSL
faslanhaseem97@gmail.com, aakila599@gmail.com, zunoomyzain94@gmail.com
Correspondence: shiblymis@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் :** இன்றைய நவீன உலகில் குறிப்பாக கொவிட் 19 பரவலுக்குப் பின்னரான காலப்பகுதியில் இணையப் பயன்பாடு அனைவராலும் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது. இதிலிருந்து விதிவிலக்கு பெற முடியாத அளவிற்கு மனித வாழ்வோடு ஒன்றித்துப்போன அம்சமாக இணையப் பாவனை மாறிவிட்டது. இந்தவகையில், பல்கலைக்கழக மாணவர்களிடத்தில் கொவிட் 19 பரவலுக்குப் பின்னரான காலப்பகுதியில் சமூகவலைத்தளங்கள் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை கண்டறியும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. பண்புசார் விபரிப்பு ஆய்வு முறையியலைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாய்விற்கு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீட முதலாம், இரண்டாம் வருட மாணவர்களில் 220 பேர் எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்டு வினாக்கொத்து வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் எம்.எஸ். எக்ஸல் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. சமூகவலைத்தளங்களை மாணவர்கள் பயன்படுத்தும் விதம், அதற்காக செலவிடும் நேரம், சமூகவலைத்தளங்கள் ஊடாக மாணவர்கள் பெற்ற சாதக விளைவுகள் மற்றும் பாதக விளைவுகள் போன்ற விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டன. கொவிட் 19 பரவலுக்குப் பின் சமூகவலைத்தளங்களின் பாவனையில் அதிக நேரங்களை செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் மாணவர்களுக்கு ஏற்பட்டிருந்தாலும், பாதக விளைவுகளை விட சாதகமான விளைவுகள் அதிகமாக அடையப்பெற்றுள்ளதை இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. குறிப்பாக, இணைய வழிக்கல்வி முறைமை சமூகவலைத்தளங்களின் அதிகரித்த பாவனையால் கிடைக்கப்பெற்ற வாய்ப்பாக மாணவர்கள் கருதுவதை அடையாளப்படுத்த முடிகின்றது. கல்வி நடவடிக்கைகள், தொழில்புரிதல், தகவல் அறிதல், சுயகற்றல், வேலைவாய்ப்பை தேடுதல், தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தல், போட்டி நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகளில் கலந்து கொள்ளல் போன்ற விடயங்களிலும் சமூகவலைத்தளப் பாவனை தாக்கம் செலுத்தியுள்ளதை அடையாளப்படுத்தலாம். மறுபுறம், உடல்சார் பாதிப்புகள், உளப்பாதிப்புகள், குடும்பத்தினருடன் நேரம் செலவழிக்காமை, இணைய அடிமைத்தனம், மோசடிகள் போன்ற எதிர்தாக்கங்களையும் மாணவர்கள் எதிர்கொண்டதை இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. இந்தவகையில், கொவிட் 19 பரவலுக்கு முன்னர் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்திய போது ஏற்பட்ட தாக்கங்களை விட கொவிட் 19 பரவலுக்குப் பின் ஏற்பட்ட தாக்கங்கள் பல சாதக விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றது எனலாம். ஆகவே, கொவிட் 19 பல்கலைக்கழக மாணவர்களை இணையப் பயன்பாட்டின் அடுத்த கட்ட நகர்வுக்கு இட்டுச்சென்றுள்ளது.

Proceedings of 8th International Symposium, FIA, SEUSL – 04th August 2021
ISBN 978-624-5736-14-0

**திறவுச் சொற்கள்:** சமூகவலைத்தளங்கள், கொவிட்-19, மாணவர்கள், பல்கலைக்கழகம், இணைய வழிக்கற்றல்

## அறிமுகம்

இன்று உலகமே இணையத்தை மையமாகக் கொண்டு இயங்கிவருகிறது. ஒரு சில துறைகளோடு சுருங்கியிருந்த இணையப் பயன்பாடு பல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தியுள்ளது (யேகசநநளஇ சுழளாயஇெ டீயயரெஇ ஹோஅயஇ ரூ ஞாடைடலஇ 2020). காலத்திற்குக் காலம் மாறிவரும் இன்றைய இலத்திரனியல் ஊடகங்களுக்கு மனிதன் இசைவாக்கமடைகிறான். இவ்வாறு வளர்ந்து வரும் நவீன சமூகவலைத்தளங்களும் சிறுவர்கள் முதல் பெரியோர் வரை அனைவரிலும் தாக்கம் செலுத்தியுள்ளது. குறிப்பாக கொவிட் 19 பரவலுக்குப் பின்னரான காலப்பகுதியில் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களிடையே சமூகவலைத்தளங்களின் பாவனையை அதிகரித்தமையால் இணையவழிக் கல்வி அறிமுகமாகி முக்கியத்துவம் வாய்ந்ததாக மாற்றம் பெற்றது.

ஒத்த கருத்துடையோர் அல்லது செயற்பாடு கொண்டோரின் சமூகத்தை வளர்க்கவும் அவர்களிடையே உள்ள சமூகப் பிணைப்புக்களை வெளிபடுத்தவும் வழி செய்யும் ஒரு இணைய சேவை சமூகவலைத்தளம் ஆகும் (சாஹிரா பானு, 2018). இவ்வாறான சமூகவலைத்தளங்களாக பேஸ்புக், வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராம், லிங்க்டின், கூகுள், மின்னஞ்சல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மனிதர்களுக்கிடையே சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்துவதையும், வியாபார நோக்கையும் முன்னிறுத்தி உருவாக்கப்பட்ட சமூகவலைத்தளங்கள் இன்று மனிதர்களின் மூளையை சலவைசெய்து அவர்களது அத்தியவசிய பொழுதுபோக்காக மாற்றம் பெற்றுள்ளது. இவ்வலைத்தளங்களில் நன்மைகள் உள்ளதைப் போலவே தீமைகளும் உள்ளன. உலகமே உள்ளங்கையில் அடங்கிவிட்டது எனப் பெருமிதம் கொள்ளும் மனிதர்கள் தாங்கள் சமூகவலைத்தளங்களுக்கு அடிமையாகியுள்ளோம் என்பதை மறந்துவிடுகின்றனர். அந்தளவிற்கு சமூகவலைத்தளங்களின் பயன்பாடு இன்று அனைவரதும் அத்தியாவசியத் தேவையாக மாறியுள்ளது. உலகில் மொத்த சனத்தொகையில் இருநூறு கோடி மக்கள் சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்துகின்றனர். அதில் 190 கோடி மக்கள் ஸ்மார்ட் போன் மூலம் சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்துகின்றனர், ஒரு நொடிக்கு பன்னிரண்டு பேர் புதிய பாவனையாளர்களாக இவற்றில் இணைந்து கொள்கின்றனர். மேலும் இளைஞர்களில் 90மூ ற்கு மேற்பட்டோர் இவ்வாறு சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர் (சாஹிரா பானு, 2018). நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சமூகவலைத்தளங்களின் பயன்பாடு மாணவர்களிலும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக கொவிட் 19 பரவலுக்குப் பின்னரான காலப்பகுதியில் அத்தகைய தாக்கங்களை அடையாளம் கண்டு பல்கலைக்கழக மாணவர்களை விழிப்புணர்வூட்டும் வகையில், கொவிட் 19 பரவலுக்குப்பின் சமூகவலைத்தளங்களின் பாவனை பல்கலைக்கழக மாணவர்களில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள என்ற தலைப்பின் கீழ் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீட

முதலாம், இரண்டாம் வருட மாணவர்களை மையப்படுத்தியதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் முக்கியத்துவம்**

இன்று மனித வாழ்வின் அனைத்துத் துறைகளோடும் பின்னிப்பிணைந்ததாக சமூகவலைத்தளங்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம், மருத்துவம், கல்வி, வணிகம் என சமூகவலைத்தளங்களின் சேவை வியாபித்துள்ளது. இதனால் சமூகவலைத்தளங்களின் தேவை இன்றியமையாததாக மாறியுள்ளது. எனினும் அனைத்திலும் நன்மை, தீமை என இரு பக்கங்கள் உள்ளது போன்றே சமூகவலைத்தளங்களும் உருவாக்கப்பட்ட நோக்கம் சிறந்ததாக இருப்பினும் காலவோட்டத்தில் அதன் நோக்கம் சிதறடிக்கப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் சிறார்கள், மாணவர்கள், இளைஞர்கள் முதற்கொண்டு பெரியவர்கள் வரை நோக்கம் தவறி சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக மாணவர் சமூகம் இதிலிருந்து விழிப்புணர்வு பெறுவது முக்கியமாகும். இதற்கு பல்கலைக்கழக மாணவர்களும் விதிவிலக்கல்ல. எனவே சமூகவலைத்தளங்களை முறைப்படுத்த வேண்டியமை காலத்தின் தேவையாகும். துடிப்பு மிகுந்த இம்மாணவப் பருவத்தில் அவர்களுக்கு உரிய வழிகாட்டல்கள் வழங்கப்படாதவிடத்து அவர்களது எதிர்காலம் இருண்டு விடும். கொவிட் 19 பரவலுக்குப் பின்னரான காலப்பகுதி மாணவர்கள் தங்கள் கல்வி நடவடிக்கைகளுக்காக சமூக வலைத்தளங்களை அதிகம் பயன்படுத்தும் காலப்பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. வகுப்பறைக் கற்றலுடன் ஒப்பிடுகையில் இணையவழிக் கற்றலானது மேலதிக செயற்பாடுகள் இன்றி இருந்த இடத்திலிருந்தே கற்பதால் பல சாதக, பாதக விளைவுகளைக் கொண்டதாக காணப்படுகிறது. அந்தவகையில், கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் சமூக வலைத்தளங்களின் செல்வாக்கு தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது காலத்தின் தேவையாக கருதப்படுகின்றது. இந்தவகையில், இவ்வாய்வானது சமூகவலைத்தளங்களின் பாவனை பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களைப் பற்றி ஆராய்வதாக அமைவதால் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

சமூக வலைத்தளங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் காணப்படினும், பல்கலைக்கழக மாணவர்கள் அதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தாதமையால் கற்றல் விடயங்களில் பொடுபோக்காக, அலட்சியமாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்த அனுமானத்தை மையமாகக் கொண்டு இவ்வாய்வுக்கான ஆய்வுப்பிரச்சினை அடையாளப்படுத்தப்படுகிறது.

**ஆய்வு நோக்கம்**

பல்கலைக்கழக மாணவர்களிடையே சமூகவலைத்தளப் பாவனையினால் ஏற்படுகின்ற தாக்கங்களைக் கண்டறிதல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு பண்புசார் விபரிப்பு முறையில் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வை மேற்கொள்வதற்காக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீட முதலாம், இரண்டாம் வருட மாணவர்கள் 220 பேர் எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்டு வினாக்கொத்துகள் வழங்கப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளுக்காக ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள் என்பன பயன்படுத்தப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் ஆளு நுஓஉநட மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

01. (Nusrath Banu, 2019) என்பவரால் எழுதப்பட்ட ''சமூக ஊடகங்களின் அதிகரித்த பயன்பாடும் இளைஞர்கள் எதிர்நோக்கும் சாவல்களும்: சம்மாந்துறையை மையப்படுத்திய சமூகவியல் ஆய்வு'' என்ற தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையில், சமூகவலைத்தளங்களின் சாதகங்கள் மற்றும் பாதகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதோடு எவ்வாறாயினும் பாதகங்கள் குறைவாக இருப்பினும் அவற்றின் தாக்கமோ சமூகத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

02. டயசியா.பு, (2017) என்பவரால் எழுதப்பட்ட "தற்காலத்தில் பாடசாலை மாணவர்களிடம் காணப்படும் சமூக ஊடகங்களின் பாவனையும் அவற்றின் விளைவுகளும் – கல்லடிப் பிரதேசத்தை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு" என்ற ஆய்வில் சமூக ஊடகங்களின் தாக்கங்கள், நன்மை, தீமைகள், சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் மாணவர்கள் தொடர்பாக பெற்றோர்கள், ஆசிரியர்கள், பிரதேசவாசிகள் போன்றோரின் கருத்துகள் போன்றன ஆராயப்பட்டுள்ளன.

03. (Rani & Padmalosani, 2019) என்பவரது ''இளைஞர்கள் மீது சமூகவலைத்தளங்களின் தாக்கம்'' என்ற ஆய்வில், தற்கால இளைஞர்கள் சமூகவலைத்தளங்களில் தமது அதிகமான நேரத்தை செலவிடுவதாகவும், அதில் சாதகங்களும் பாதகங்களும் இருப்பதாகவும், அதனை முறைப்படி கையாள வேண்டும் எனவும் இவ்வாய்வு அடையாளப்படுத்துகிறது.

04. ஜெயரத்ன, எல்.சீ.எச். (2014) எழுதிய ''முகநூல் பாவனை மற்றும் இலங்கை முகாமைத்துவ இளமானிகளின் ஈடுபாடு இடையிலான தொடர்பு'' என்ற ஆய்வில் கல்வி செயல்திறனில் சமூக ஊடகங்களின் பயன்பாட்டின் தாக்கம் எவ்வாறானது என்பது இலங்கைப் பல்கலைக்கழகங்களின் இளங்கலைப் பட்டதாரிகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது.

05. தசுனி, ஜே. (2020) என்பவரால் எழுதப்பட்ட ''இலங்கையில் நெருக்கடிக்குப் பின்னரான காலப்பகுதியில் சமூக நடத்தையில் சமூக ஊடகங்களின் தாக்கம்'' என்ற ஆய்வில் இலங்கையில் நெருக்கடிக்குப் பின்னரான சூழ்நிலையில் சமூக நடத்தைக்கு சமூக ஊடகங்களின் தாக்கம் எவ்வாறிருந்தது என்பது பற்றி முன்வைக்கப்பட்டுள்ளது.

06. தென்னகோன், லஸன்திக, சில்வா (2018) ஆகியோரின் "கல்விசார் செயற்பாட்டில் சமூகவலைத்தளப் பாவனையின் தாக்கம்: இலங்கை பல்கலைக்கழக இளமானிகளை மையப்படுத்திய விடய ஆய்வு" எனும் ஆய்வானது கல்விச் செயற்பாட்டில் சமூக ஊடகங்களின் பயன்பாட்டின் தாக்கம் எவ்வாறானது என்பது இலங்கைப் பல்கலைக்கழகங்களின் இளங்கலைப் பட்டதாரிகளை அடிப்படையாகக் கொண்டு கண்டறியப்பட்டுள்ளது.

07. (Roshan, Nafrees, Rija, & Kariapper, 2019) ஆகியோரின் "WhatsApp Usage among the Selected Schools Students in Kalmunai, Sri Lanka" எனும் ஆய்வானது றூயவளயீ பயன்பாடு மாணவர்களின் கல்வியியல் நேரத்தினை பாதிக்கின்றது என்பதை குறிப்பிட்டிருந்தது. இந்த முடிவினை ஆதரிக்கும் வகையில், (சுழளாயெ ரூ யேகசநநளஇ 2019) ஆகியோரினால் செய்யப்பட்ட மற்றுமொரு ஆய்வின் முடிவுகள் பெறப்பட்டிருந்தன.

08. (Kariapper, 2020) என்பவரால் எழுதப்பட்ட IMPACT OF YOUTUBE IN HIGHER EDUCATION IN SRI LANKA" என்ற ஆய்வில YouTube பயன்பாடானது உயர்கல்வியில் நேர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகிறது என்பதினை உறுதிப்படுத்தியது.


09. (Razeeth, Kariapper, Pirapuraj, Rishan, & Nafrees, 2019) ஆகியோரின் "Impact of Social Networking Media among Undergraduates in Higher Educational Institution" எனும் ஆய்வானது கல்விச் செயற்பாட்டில் சமூக ஊடகங்களின் பயன்பாட்டின் தாக்கம் எவ்வாறானது என்பது இலங்கைப் பல்கலைக்கழகங்களின் இளங்கலைப் பட்டதாரிகளை அடிப்படையாகக் கொண்டு கண்டறியப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட ஆய்வுகள் சமூக வலைத்தளங்களினால் ஏற்படுகின்ற தாக்கங்களைப்பற்றி ஆராய்கின்ற அதேவேளை, இவ்வாய்வானது கொவிட் 19 பரவலுக்குப் பின்னர் ஏற்பட்ட அதீத இணையப்பாவனையினால் பல்கலைக்கழக மாணவர்கள் சமூக வலைத்தளப் பாவனைக்கு அதிகூடிய முக்கியத்துவம் கொடுத்தமையால் ஏற்பட்டுள்ள தாக்கங்களை ஆராய்வதாக அமைகின்றது. இந்தவகையில், மேற்கூறப்பட்ட ஆய்வுகளில் காணப்படும் ஆய்வு இடைவெளியை மையப்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

**பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்**


கொவிட் 19 பரவலுக்குப் பின்னர் பல்கலைக்கழக மாணவர்களின் கற்றலில் சமூகவலைத்தளங்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றிய கலந்துரையாடல். சமூகவலைத்தளங்கள் மாணவர் சமுதாயத்தைக் கல்விச் சிந்தனையில் இருந்து

தூரமாக்குகின்றது என்ற கருத்திற்கு மாற்றமாக கற்றல் கற்பித்தலுக்கு சமூகவலைத்தளங்கள் உறுதுணையாக மாற்றம் பெற்றுள்ளதை சமகாலத்தில் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாய்வுக்காக வழங்கப்பட்ட வினாக்கொத்துகளில் 204 வினாக்கொத்துகள் கிடைக்கப்பெற்றன. மாணவர்கள் பயன்படுத்தும் சமூகவலைத்தளங்கள் பற்றிக் கேட்கப்பட்ட போது, அவர்களில் 85 மாணவர்கள் Facebook ஐப் பயன்படுத்துவதாகவும், 62 மாணவர்கள் Instagram ஐப் பயன்படுத்துவதாகவும், 12 மாணவர்கள் Twitter ஐப் பயன்படுத்துவதாகவும், 200 மாணவர்கள் Whatsapp ஐப் பயன்படுத்துவதாகவும், 14 மாணவர்கள் LinkedIn ஐப் பயன்படுத்துவதாகவும், 136 மாணவர்கள் Google ஐப் பயன்படுத்துவதாகவும், அவர்களில் இன்னும் சிலர் Zoom, YouTube, Gmail, IMO போன்றவற்றைப் பயன்படுத்துவதாகவும் தெரிவித்தனர். இதனை வரைபு (1) விபரிக்கின்றது.




வரைபு (1) பயன்படுத்தும் சமூக வலைத்தளங்கள்

மாணவர்கள் அதிக நேரம் பயன்படுத்தும் சமூகவலைத்தளம் எது எனக் கேட்கப்பட்ட போது, அவர்களில் 8.8% மாணவர்கள் Facebook ஐப் பயன்படுத்துவதாகவும், 83.8% மாணவர்கள் ுாயவளயீ ஐப் பயன்படுத்துவதாகவும், அவர்களில் வேறு சிலர் Instagram, Twitter, LinkedIn, Google, Zoom, YouTube போன்றவற்றைப் பயன்படுத்துவதாகவும் கூறினர். இதனை வரைபு (2) விபரிக்கிறது.





வரைபு (2) அதிக நேரம் பயன்படுத்தும் சமூகவலைத்தளம்


ISBN 978-624-5736-14-0

கொவிட் 19 பரவலுக்கு முன் நாள்தோறும் சமூகவலைத்தளப் பாவிக்கும் கால அளவு பற்றி வினவப்பட்ட போது, அவர்களில் 21.6% ஆனோர் 2 மணித்தியாலங்களை சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்துவதில் செலவிடுவதாகவும், 34.8% ஆனோர் ஒரு மணித்தியாலத்தை சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்துவதில் செலவிடுவதாகவும், 36.8% ஆனோர் 30 நிமிடங்களை சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்துவதில் செலவிடுவதாகவும், 6.8 % ஆனோர் வேறு சில கால அளவுகளில் சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்துவதற்கு செலவிடுவதாகவும் தெரிவித்தனர். இதனை வரைபு (3) தெளிவுபடுத்துகின்றது.





வரைபு (3) கொவிட் 19 க்கு முன் நாள்தோறும் சமூகவலைத்தள பாவிக்கும் கால அளவு



வரைபு (4) சமூகவலைத்தளங்களின் பாவனை அதிகரிப்பு


கொவிட் 19 பரவலுக்குப் பின் சமூகவலைத்தளங்களின் பாவனை அதிகரித்துள்ளதா? என வினவிய போது அதிகரித்ததாக 95% ஆனவர்களும், அதிகரிக்கவில்லை என 5% ஆனவர்களும் தெரிவித்தனர். இந்தவகையில், இவர்கள் தங்களுக்கு கிடைக்கின்ற ஓய்வுநேரங்களில் அதிகமாக சமூக வலைத்தளத்தைப் பயன்படுத்துவதிலே அதிக நாட்டம் கொண்டிருந்ததை அறிய முடிகின்றது. இதனை வரைபு (4) காட்டுகிறது. சமூகவலைத்தள பாவனை அதிகரித்தமைக்கான காரணங்களைப் பற்றி வினவிய போது 82.4% ஆனவர்கள் கல்வி நடவடிக்கைகளுக்காக எனவும், 6.9% ஆனவர்கள் தொழிலுக்காக எனவும், 47.4% ஆனவர்கள் பொழுதுபோக்கிற்காக எனவும், 44.1% ஆனவர்கள் தகவல் அறிவதற்காக எனவும், 10.3% ஆனவர்கள் வேறு தேவைகளுக்காக எனவும் பதிலளித்தனர்.




வரைபு (5) அதிகரித்தமைக்கான காரணம்

இவ்வாறு, சமூகவலைத்தளங்களில் அதிக ஈடுபாடு ஏற்பட்ட காரணத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் அதிக நேரத்தை சமூகவலைத்தளங்களில் செலவழிப்பவர்களாக மாறினர்.

வரைபு (3) குறிப்பிடப்பட்டுள்ள நாளொன்றில் சமூகவலைத்தளங்களில் செலவழிக்கும் கால அளவு அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்தவகையில், சமூக வலைத்தளங்களை உபயோகிப்பதில் செலவிடும் மணித்தியாலங்கள் பற்றி கேட்ட போது அவர்களில் 4% ஆன மாணவர்கள் நான்கு மணித்தியாலங்களைச் செலவிடுவதாகவும், 17% ஆனோர் மூன்று மணித்தியாலங்களைச் செலவிடுவதாகவும், 27% ஆனோர் 30 நிமிடங்களைச் செலவிடுவதாகவும், 47% ஆனோர் ஒரு மணித்தியாலத்தைச் செலவிடுவதாகவும், 4% ஆனோர் வெவ்வேறு மணித்தியாலங்களைச் செலவிடுவதாகவும் கூறினர். இதனை வரைபு (6) தெளிவுபடுத்துகின்றது. இந்தநேரங்களைத் தவிர்த்து, விரிவுரைகளுக்காக zoom செயலியை ஒரு நாளைக்கு 2-6 மணித்தியாலங்களை பயன்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது.




வரைபு (6) சமூக வலைத்தளங்களை உபயோகிப்பதில் செலவிடும் மணித்தியாலங்கள்

கொவிட் 19 பரவலுக்குப் பின் சமூக வலைத்தளங்களின் அதிகரித்த பாவனை சாதக விளைவுகளை ஏற்படுத்தியது வினவப்பட்ட போது அவர்களில் 63% ஆனவர்கள் சாதக


ISBN 978-624-5736-14-0


விளைவுகளை ஏற்படுத்தியது எனவும், 37% ஆனவர்கள் பாதக விளைவுகளை ஏற்படுத்தவில்லை எனவும் கூறினர். இதனை பின்வரும் வரைபு (7) விபரிக்கின்றது.




வரைபு (7) சாதக விளைவுகளை ஏற்படுத்தல்

சாதக விளைவுகள் பற்றிக் கலந்துரையாடப்பட்ட போது அவர்களில் 59.8% ஆனோர் கல்வி நடவடிக்கைகளில் முன்னேற்றம் அடைந்ததாக தெரிவித்தனர். 9.3% ஆனோர் வேலைவாய்ப்புகள் கிடைத்தன எனவும், 45.1% ஆனோர்


தொழில்நுட்ப அறிவை வளர்க்க சந்தர்ப்பம் கிடைத்தது எனவும், 43.6% ஆனோர் பொது அறிவை மேம்படுத்த உதவியது எனவும், 12.3% ஆனோர் கடல்தாண்டிய பலமான உறவை ஏற்படுத்த முடிந்தது எனவும், 49மூ ஆனோர் சுயகற்றலுக்கு வழிவகுத்தது எனவும், 58.8மூ ஆனோர் புதிய விடயங்களை பதிவேற்ற மற்றும் அறிய முடிந்தது எனவும் கருத்துரைத்தனர். இதனை வரைபு (8) விபரிக்கின்றது.




வரைபு (8) சாதக விளைவுகள்


பாதக விளைவுகளாகக் கருதியவை பற்றி ஆராய்ந்த போது, 64.7% ஆனவர்கள் குடும்பத்துடன் நேரம் ஒதுக்க முடிவதில்லை எனவும், 52% ஆனவர்கள் உடலியல் பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன எனவும், 14.2% ஆனவர்கள் சுய விபரம் திருடப்படுகிறது எனவும், 47.5% ஆனவர்கள் இணையத்திற்கு அடிமையாகின்றனர் எனவும், 33.3%

ஆனவர்கள் தகவல்களுக்கு உத்தரவாதமில்லை எனவும், 15.2% ஆனவர்கள் தவறான உறவுகள் ஏற்படுகின்றன எனவும், 0.5% நேர விரயமாகின்றது எனவும், 29.4% ஆனவர்கள் உளப்பாதிப்புக்கள் ஏற்படுகின்றன எனவும், 1.5% ஆனவர்கள் தற்கொலைகள் இடம்பெறுகின்றன எனவும் கூறினர். இதனை வரைபு (9) காட்டுகின்றது.





வரைபு (9) பாதக விளைவுகள்

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் என்றவகையில், கொவிட் 19 பரவலுக்குப் பின் சமூகவலைத்தளங்களின் பாவனை அவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் சாதகமான விளைவை ஏற்படுத்தியதாக வரைபு (8) இல் தெரிவித்தனர். இதன்தொடரில், சமூகவலைத் தளங்கள் அவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்தியது பற்றி வினவிய போது 78% ஆன மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் பங்களித்தது எனவும், மிகக்குறைந்தளவானர்களே 22% ஆன மாணவர்கள் பங்களிக்கவில்லை எனவும் தெரிவித்தனர். இதனை வரைபு (10) மூலம் அவதானிக்க முடியும்.




வரைபு (க0) கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்தல்

இந்தவகையில், கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்த சமூகவலைத்தளங்களை எவ்வாறு பயன்படுத்தினீர் என்று வினவிய போது,. Online Course, Programs, Webinar, Online Competitions (Debate, Quiz, Speech, Essay), Research conferences போன்றவற்றில் கலந்துகொள்வதற்காக ஊக்கம் காணப்பட்டதாக தெரிவித்தனர். இதனை வரைபு (11) விபரிக்கின்றது.




வரைபு (க1) கற்றல் நடவடிக்கைகள்

**முடிவுரையும் பரிந்துரையும்**

சமூகவலைத்தளங்களை மாணவர்கள் பயன்படுத்தும் விதம், அதற்காக செலவிடும் நேரம், சமூகவலைத்தளங்கள் ஊடாக மாணவர்கள் பெற்ற சாதக விளைவுகள் மற்றும் பாதக விளைவுகள் போன்ற விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டன. கொவிட் 19 பரவலுக்குப் பின் சமூகவலைத்தளங்களின் பாவனையில் அதிக நேரங்களை செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் மாணவர்களுக்கு ஏற்பட்டிருந்தாலும், பாதக விளைவுகளை விட சாதகமான விளைவுகள் அதிகமாக அடையப்பெற்றுள்ளதை இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. குறிப்பாக, இணைய வழிக்கல்வி முறைமை சமூகவலைத்தளங்களின் அதிகரித்த பாவனையால் கிடைக்கப்பெற்ற வாய்ப்பாக மாணவர்கள் கருதுவதை அடையாளப்படுத்த முடிகின்றது. கல்வி நடவடிக்கைகள், தொழில்புரிதல், தகவல் அறிதல், சுயகற்றல், வேலைவாய்ப்பை தேடுதல், தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தல், போட்டி நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகளில் கலந்து கொள்ளல் போன்ற விடயங்களிலும் சமூகவலைத்தளப் பாவனை தாக்கம் செலுத்தியுள்ளதை அடையாளப்படுத்தலாம். மறுபுறம், உடல்சார் பாதிப்புகள், உளப்பாதிப்புகள், குடும்பத்தினருடன் நேரம் செலவழிக்காமை, இணைய அடிமைத்தனம், மோசடிகள் போன்ற எதிர்தாக்கங்களையும் மாணவர்கள் எதிர்கொண்டதை இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. இந்தவகையில், கொவிட் 19 பரவலுக்கு முன்னர் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்திய போது ஏற்பட்ட தாக்கங்களை விட கொவிட் 19 பரவலுக்குப் பின் ஏற்பட்ட தாக்கங்கள் பல சாதக விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன எனலாம். ஆகவே, கொவிட் 19 பல்கலைக்கழக மாணவர்களை இணையப் பயன்பாட்டின் அடுத்த கட்ட நகர்வுக்கு இட்டுச்சென்றுள்ளது.

சமூகவலைத்தளங்களின் பாவனை மாணவர்களுக்கு சவால் மிகுந்ததாக அடையாளப்படுத்தப்பட்டாலும் பெரும்பாலான மாணவர்கள் பயனுள்ள விடயங்களுக்காகவே சமூகவலைத்தளங்களை உபயோகித்துள்ளமையை இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. குறிப்பாக


ISBN 978-624-5736-14-0

கொவிட் 19 பரவலுக்குப் பின்னரான காலப்பகுதியில் இணையவழிக் கற்கைகளை தொடர்வதில் சவால்கள் காணப்படினும், மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கும், பல்வேறு நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், போட்டிகளில் பங்குகொள்வற்கும், இன்னும் சிலர் தம் தொழில்களை மேற்கொள்ளவும் சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்தியுள்ளமையை அவதானிக்க முடிகிறது. அந்தவகையில் பல்வேறு சவால்கள் காணப்பட்ட போதிலும் பாதகமான விடயங்களை விட சாதகமான விடயங்களை நிறைவேற்றுவதற்கே மாணவர்கள் அதிகளவில் சமூகவலைத்தளங்களை உபயோகிப்பதை இவ்வாய்வினூடாக அடையாளப்படுத்தலாம்.

இணையப் பாவனை அதிகரித்துள்ள இந்த சமகாலத்தில் பல்கலைக்கழக மாணவர்களாக இருந்தாலும், பாடசாலை மாணவர்களாக இருந்தாலும் ஏனைய கல்வி கற்கின்றவர்களாக இருந்தாலும் சில ஒழுங்குமுறையான வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்ற போது அவர்கள் இணையத்தை சரியாகப் பயன்படுத்துவார்கள். ஆகவே அவர்களுக்கு இணையவழிக் கருத்தரங்குகள் அதே போல் இணையவழியாக நடக்கின்ற வேறு விடயங்களைத் தெரியப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் சில தன்னார்வக் குழுக்களால் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு செய்கின்ற போது சிறந்த பலனைக் கண்டுகொள்ள முடியும். அத்தோடு குறிப்பாக மாணவர்களுக்கு சமூகவலைத்தளங்கள் ஊடாக வகுப்புகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை குறித்த தரப்பினர் மேற்கோள்வது சிறந்தது. குறிப்பாக, பல்கலைக்கழக மாணவர்களின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் அவர்களின் நடத்தைகளை அவதானித்து, சமூக வலைத்தளங்களின் அவர்களின் ஈடுபாடு குறித்து அறிந்து கொள்வதன் மூலம் அவர்கள் சமூகவலைத்தளங்களை தவறாக பயன்படுத்துவதை தவிர்க்க முடியும்.

**உசாத்துணைகள்**


Jayarathna, L. , Fernando, W. (2014). 'Relationship between Facebook Usage and the Student Engagement of Sri Lankan Management Undergraduates'. World Academy of Science, Engineering and Technology, Open Science Index 92, International Journal of Industrial and Manufacturing Engineering, 8(8), 2697 - 2701.

Sumaiya, MA. , Safiyya, AH. , Mahzoom, ARM. (2019). பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்களுக்கு மத்தியில் WHATSAPP பாவனையும் அதன் தாக்கங்களும்: இலங்கை தென்கிழக்கு பல்கைக்கழகத்தை மையப்படுத்திய ஆய்வு. *Proceeding Sixth International Symposium*: Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka, Oluvil.

Tennakoon, WDNSM, Lasanthika, WJAJM and Silva, MMSR. (2018). Impact of social media usage on academic performance: A case of undergraduates in Sri Lankan state universities. *Research conference on Business studies*: Jaffa Sri Lanka.

டயசியா.பு, (2017). தற்காலத்தில் பாடசாலை மாணவர்களிடம் காணப்படும் சமூக ஊடகங்களின் பாவனையும் அவற்றின் விளைவுகளும் – கல்லடிப் பிரதேசத்தை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு. *ஏழாவது சர்வதேச ஆய்வு மாநாடு:* இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

ஷமீரா, அப்துல் வாஹிட் பாதிமா் நாதிரா, அப்துல் குத்தூஸ் பாதிமா. (2016). இளைஞர்கள் மீதான சமூக ஊடகங்களின் தாக்கங்கள் : இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை மற்றும்

கலாச்சார பீட மூன்றாம் வருட மாணவர்களை மையமாக கொண்ட ஆய்வு. *ஆறாவது சர்வதேச ஆய்வு மாநாடு:* இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

**இணையத்தளங்கள்**

*சமூக வலைத்தளங்களும் அதன் பயன்பாடுகளும்.* (2018). http://upscmainsintamil.blogspot.com/2018/10/blog-post_15.html?m=1

சாஹிரா பானு, எம்.பி, (2019). *சமூகவலைத்தளங்களின் பாவனையும் அதிகரித்து வரும் கலாச்சார சீர்கேடுகளும்.* https://newsplus.lk/feature/3621/

சிபானா, ஆர்.எப், (2019). *இளைஞர்களும் சமூகவலைத்தளங்களும்.* https://www.islamkalvi.com/?p=120731

யோகி அருமைநாயகம், (2013). *சமூக வலைத்தளங்களும் அதன் பயன்பாடுகளும்.* https://www.panippookkal.com/ithazh/archives/1921

*மனித வாழ்வில் சமூகவலைத்தளங்கள்.* (2020). https://www.eaglevix.com

மயூறினி வெலிச்சோர், (2018). *சமூக வலைத்தளங்கள் இன்றைய சமூகத்தில் ஏற்படுத்தி வரும் தாக்கம்.* http://www.battinews.com/2018/11/Impact-of-Social-Media-on-Society.html

*மாணவர்கள் சமூக வலைத்தளங்களை எப்படி பயன்படுத்திக் கொள்ள வேண்டும்?.* (2018) https://kalvikoodam.wordpress.com/2018/10/22/

வஜ்ஹுத்தீன். (2013). *சமூக வலைதளங்கள்:நன்மையும், தீமையும்.* http://pnoexpress.blogspot.com/2013/06/blog-post_10.html?m=1